95

பதிவு எண் — M. 5720   வெள்ளிக் கிழமையில்   குருகுலத் தாள்

முல்லைக் கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது, சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனர்.

கிளை—ரு	குருகுலம், மாம்பாக்கம் ; விகிருதி, பங்குனி ; 16—3—51.	தளிர்—உஉ

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

தமிழ்ப் புண்ணியர்

திரு. J. M. நாயுடு B A.

சிறந்த மேதை; கடமை யுணர்ச்சியும் நடக்கையும் உடையவர்.

ஆவணப் பதிவு அலுவலுடையர்; தெலுங்கு தாய்மொழியாக உடையவர்; தமிழகத்தார்.

எனினும், தமிழ்ச் செவ்வி நன்கமைந்தவர். 'எழில்' என்னும் கவிதைநூலும், 'இலக்கியச் செவ்வி' என்னும் உரை நடைப் பெருநூலும், 'நளன்' 'தமயந்தி' என்னும் நாடக நூல்களும் தமிழ்க்கு இயற்றி உதவியவர்.

- கல்வி யறிவு -

(திரு. S. R. தியோடர்)

கத்தியின்றி ரத்தமின்றி 'யுத்த'மின்றி நாம் 'சுதந்திரம்' பெற்றிருக்கிறோம்.

இம் மகிழ்ச்சியில், நமக்கு இந் நிலை தேடித் தருவதற்கு, வீர உணர்ச்சியோடு தூக்கு மேடையிலேயே உயிர் நீத்த திரு. பகத் சிங்; தனி யொருவனுக்கு உணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று முழங்கிய பாரதியார்; கப்பலோட்டிய தமிழ் வீரர் சிதம்பரனார்; விடுதலைப் போரில் அமரரான மகாத்மா காந்தி இவர்களை மறவாது நினைப்பது நல்லது.

பேச வாய்ப்பு நேரும்போதெல்லாம் முதலில் இவர்கள் நினைவே எனக்கு உண்டாவது வழக்கம். நாட்டு விடுதலைக்காக அவர்கள் எந்நாளும் முயன்ற வண்ணம் இருந்தார்கள்.

அதற்காக அவர்கள் தம் கல்வி யறிவையும் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆனால் நாம் இந்நாளில் 'பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு நாமமது தமிழரென'ப் பயனில்லாத வாழ்க்கை நடத்துகின்றோம்.

பயனுள்ள வாழ்க்கைக்கு அடிப்படையானது கல்வி. 'படிப்பில்லான் இருந்த குடி, நரம்பில் துடிப்பில்லான் இருந்த சுடுகாடு' என்று கூறுகிறார்கள். நரம்பில் தமிழக வீரர் குருதி பாயப்பெற்ற நாம் துடிப்பின்றி இருத்தல் நல்லதா? அந்நிலை மாற நாம் அனைவரும் படித்து மேன்மையடைய வேண்டாமா?

ரஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளெல்லாம் ஒரு காலத்தில் அறியாமையிற்றான் மூழ்கிக் கிடந்தன. ஆனால், இந்நாளில், அந்நாட்டு மக்கள் நூற்றுக்கு நூறும் கல்வி அறிவுடன் திகழ்கிறார்கள். நம் நாடும் அந் நிலைமை அடையவேண்டும் என்றுதான் இங்கே 'கல்விக் கூடம்' தொடங்கினர்.

கிணற்றுத் தவளைகட்கு வெளியுலகம் தெரிவதில்லை. தாம் வாழும் கிணறுகளே அவைகட்கு உலகம். நாமும் நம்மூரில் இருந்துகொண்டே, உலகம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதில் கவனம் செலுத்தாது, மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்ற மாட்டானா என்னும் வாய் வேதாந்தத்தோடு காலத்தைக் கழிக்கிறோம்.

நம் நாட்டு மக்களிற் பலர், கோய்களிற் பெரும்பாலன, 'மாரியாத்தாள் செயல்' என்று ஏதோ ஒன்றின்மேல் பழி போட்டுவிட்டு அவைகளை நீக்கும் கருத்தின்றி வாளா விடுகின்றனர். இதனால் நாட்டில் நிலவும் துன்பங்களை நாம் நேரில் பார்க்கிறோம். வெள்ளம் வருவதற்கு முன் அணை கோலுவதற்குப் போதுமான கல்வி பாமர மக்களிடையில் இன்னும் பரவவில்லை. நோயைப் போக்கிக்கொள்ளத் தக்க நல்லறிவு வளரக் கல்வி மக முதன்மையானது.

நாட்டு மக்கள் அனைவரும் கல்வி அறிவு பெற இக் குருகுலக் கல்வி நிலையம் ஒரு நல் வாய்ப்பு.

வெள்ளையர் 'ஏகாதிபத்தியத்தை' ஓட்டிவிட்டோம்; ஆனால் இப்போது வெளிறு என்னும 'அறியாமை' 'ஏகாதிபத்தியத்தை'யும் புறங்காட்டி ஓடச்செய்யவேண்டும்.

மக்கள் எல்லோரும் படித்தால், வரப்போகும் தேர்வில் நாட்டு நலனுக்காக உழைக்கும் நல்லவர் யாரென்று ஆராய்ந்து தேர்ந்தெடுக்க இயலும். இந் நாட்களில், கல்வி நிறைவு இன்மையால் தக்கவரைத் தேர்ந்தெடுக்க இயல்வதில்லை; காசு வாங்கிக்கொண்டு 'ஓட்டு'ச் செய்தல் என்பது உயர்ந்த நாகரிகப் பண்புக்கு ஏற்றதன்று.

மனிதர் மனிதராக வாழ முயல வேண்டும். அறிவுடையவராக ஒவ்வொருவரும் வாழவேண்டும்; அறிவுடையவர் செய்யும் செயல்கள் ஒவ்வொன்றும் சிறப்புடையதாகத் தோன்றும்.

ஆசிரியர் ஒருவர் இரண்டு மாணவர்க்குத் தலைக்கு ஒரு ரூபா கொடுத்து வீட்டின் அறை ஒவ்வொன்று காட்டி அவ்வறை நிறையச் சிறந்த பொருள் ஏதாவது வாங்கி நிரப்பிவைக்குமாறு பணித்தார்; மாலையிற் சென்று பார்க்கும்போது ஒரு மாணவன் தன் அறை நிறைய வரகு வைக்கோலைத் திணித்துவைத்திருந்ததையும், மற்றவன் தன் அறையைத் தூய்தாக விளக்கி நீர் தெளித்துக் கோலமிட்டு நடுவில் சுடர்விளக்கு ஏற்றிவைத்துத் தட்டில் வெற்றிலை பாக்கோடு தம் வருகையை எதிர்பார்த்திருந்ததையும் கண்டார். அறிவின் பயன் இது வென்று இந் நிகழ்ச்சி நன்கு விளக்குகின்றது.

இதுவரையில் நாம் ஊமையாய்ச் செவிடர்களாய்க் காலங் கடத்தியது போதும். இனியாவது உண்மை உணர்ந்து கல்வி அறிவுடையவராக முயல்வோமாக.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD, COIMBATORE.

- உயர்ந்த -

வைரங்கள்

சவரன் பொன் நகைகள்

அசல் வெள்ளி சாமான்கள்

உத்தரவாதமுள்ளவை

S. சாமிநாத அய்யர் & சன்ஸ்

111, நேதாஜி போஸ் ரோடு, சென்னை 1.

"Silver Medals & Prize Cups are always available for Sale"

— GUARANTEED —

JEWELLERY HOUSE

தென்னாடு சிவம் திகழும் நாடு; தவநெறி விளங்கும் நாடு; திருச்சிற்றம்பலம் என்னும் நடு நாடி இயக்கம் அறிந்த நாடு. சைவசமயம் தவநெறிச் சமயம். சிவபெருமான் தவநெறித் திருவினன்.

இவ்வாற்றால், தென்னாடுடைய சைவர், அகவழிபாடத் தவ நெறியிலேயே கருத்தாயிருப்பர். நுண்ணிய அருள்ஞான வெளியில் இயங்குதலிலேயே எண்ணமுடையர் திருச்சிற்றம்பலச் செல்வாக்கே அவருடையது. அதனால் அவர், எல்லா வெற்றிகளும் உடையவர்; இருமை நலங்களுங் காண்பர்.

எனவே, திருச்சிற்றம்பலமே அவாக்தக் கோயில்; கோயில் என அவரால் தனித் தலைமையில் வைத்துப் பாராட்டப்படுவது அதுவே. இது திருச்சிற்றம்பலப் பெருமை.

நடு நாடி நடமாகிய இத் தவநெறியியக்கத்துக்கு ஓங்காரம் அடிப்படை; இதனைத் திருவாரூர் நினைவூட்டுகின்றது. அதிலிருந்து திருவைந்தெழுத்தின் ஆக்கம் பெருகித் திருவைந்தெழுத்தின் வாயிலாக மண் முதல் ஐம்பூதப் பொருள்களின் திறமுங் கூடிவரும். அதனால், தட்ப வெப்பப் பொருத்தமுங் கைவரும். இத்தகைய அகப்புற அருள் வலிமைகள் நிரம்புவோர்க்கு ஞான சம்பந்தரைப் போல் உலகத்துக்குப் பணி செய்யும் ஆற்றல் தலைக்கூடும்.

தவநெறிச் சிறப்புகளாகிய இத் தென்திசைப் பழக்கங்களை முறையே நினைவூட்டுந் திருப்பதிகளே, பெரும்பற்றப் புலியூர், திருவாரூர், திருக்காஞ்சி, திருவையாறு, திருத்தோணிபுரம் என்பன. தென்னாட்டின் மாட்சிமை தவநெறி மாட்சிமையேயாதலின், திருப்பதிகள் இங்ஙனம் முறை வகுத்துக் கூறப்பெற்றன; "தவஞ் செய்வார் தம் கருமம் செய்வார், மற்று அல்லாதார் அவம் செய்வார் ஆசையுட் பட்டு;" ஆதலால், 'தென் திசைக்குப் பிற திசைகள் ஒவ்வா' என்றும் 'தேசமெல்லாம் விளக்கிய தென்திசை' என்றும் இத் திசை பாராட்டப்பெற்றது.

பெரிய புராணம்

11

திருக்கயிலையில் அன்று உபமன்னிய முனிவர், வன்றொண்டர் வரலாற்றை, அவர் விளங்கியிருந்த தென்னாட்டுச் சிறப்புடன், இவ்வாறு விளக்கினார். அதனால், வன்றொண்டர் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகைக்குப் 'பெரிய புராணம்' என்னும் ஒரு விரிநூல் பின்பு எழுவதாயிற்று. உபமன்னிய முனிவரின் உரையினால் வழிவழியாக வன்றொண்டரின் பெருமை மிகுந்து வருதலால், சேக்கிழார்க்கும் அப்பெருமான்பால் மேல்மேல் மெய்யன்பு முறுகியெழுந்தது; எனவே, வன்றொண்டர் அருட் பதிகத்துக்கு விரிநூல செய்யும் விருப்பமும் உடன் எழுந்தது.

பெரிய புராணம் இங்ஙனம் விரிநூலாய் எழுவதற்கு முதல் நூலாயிருப்பது, திருவாரூர்ப் பெருமான் திருவருளால் ஆரூரர் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகம். அது, யாவராலுந் தொழப்பெற்ற பெருமையமைந்தது; அது, மெய்த் தன்மை வாய்ந்தது.

அப் பதிகத்திற் கூறப்பெற்ற அடியார்களை நம் குரவர் நம்பியாண்டார் நம்பி என்பார், உள் நிறைவுடன் அவரவர் வரலாறுகளை அருளால் உணர்ந்து வகைப்படுத்தி அமைத்துத் 'திருத்தொண்டர் திருவந்தாதி' என்னும் பெயரால் ஒருவகை நூல் செய்து உதவினார்.

'பதிகம்' என்னும் முற்கூறிய தொகை நூலும் (முதல் நூல்), 'அந்தாதி' என்னும் வகை நூலும் (வழி நூல்) உதவியாயிருத்தலின், 'திருத்தொண்டர் புராணம்' என்னும் விரிநூலை வரலாறுகள் பிறழாமல் இயற்ற ஆசிரியர்க்கு வாய்ப்பாயிருந்தது.

உலகம் அறிவுத் திறம் பெருகி மெய்யன்பில் தழைக்கவும், அத் திறம் அமைந்த சைவவுலகம் தன்னிலையில் மேன்மேலும் நிலைபெற்று ஓங்கவும் நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையை அருளிச்செய்தார். அத் திருப்பதிகத்தில் எடுத்தோதப் பெற்ற அடியார்களின் திருக்கூட்டம் ஆரூரர் காலத்தில் சோழ நாட்டுத் திருவாரூரில் தங்கி விளங்கியிருந்தது. ஆதலால், திருக்கூட்டம் தங்கி உறைதற்குரிய நலம் அமைந்த தண் புனல் மிக்க சோழவள நாட்டின் அழகினை இனிக் காணலாம்.

12

திருநாட்டுச் சிறப்பு:

சோழ நாடு இங்கே திரு நாடு எனப் பெறுகின்றது. காரணம், தொண்டர் திருக்கூட்டம் உறைகின்ற இடம் அது.

தொண்டர் திருக்கூட்டம் தங்கியுறைதற்கு நாடு வளமுடையதாயிருப்பது நல்லது. காவேரியாற்றின் பெருக்கால் சோழநாடு அச் சிறப்பு மிக்கதாய்த் திகழ்கின்றது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை 1.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை	விகிருதி, பங்குனி	தளிர்
3	16-3-51 வெள்ளி	22

அறங்கள்

வாழ்க்கையில் மக்களுக்குப் பல பொறுப்புகள் உள்ளன. அப் பொறுப்புகளைச் செய்கையிற் கொண்டுவரும்போது அவற்றைக் 'கடமைகள்' என்று சொல்லுகிறோம். வரையறுத்த திட்டங்களுடன் உறுதியுடன் செய்யப் பெறுதலால், 'அறங்கள்' என்றும் அவை சொல்லப்பெறும்.

வாழ்க்கை மறையாகிய திருக்குறள் ஓர் அறநூல்! அதில், ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் எடுத்துக் காட்டப் பெற்றிருக்கின்றன. அதன் ஒவ்வோர் அதிகாரமும் ஒவ்வொரு கடமையை உணர்த்துகின்றது.

கடமைகள் செய்யப்படும்போது, செய்வார்க்கும் உலகத்துக்கும் நன்மை உண்டாகின்றது; கடமைகள் செய்யாதபோது, அப்படியே, இருதிறத்தார்க்கும் தீமைஉண்டாகின்றது. வாழ்க்கை நலம் கெடுகின்றது.

பிறந்த குடும்பத்துக்கும் மொழிக்கும் நாட்டுக்கும் ஒவ்வொருவரும் பொறுப்புணர்ந்து கடமைகளைச் செய்துவந்தால், நாட்டில் இப்போதுள்ள இன்னல்கள் பலவும் அடியோடு நீங்கிப் போகும்.

கடமையுணர்ந்து தம்வருவாய், செய்கை, செல்வாக்கு முதலியவற்றைப் பகுத்து நன்மைகளைச் செய்துவர வேண்டுவது கட்டாயமாகின்றது.

பெரியோர்கள் கருத்துப்படி பார்த்தால், பிறர் நலத்தை முன் வைத்துத் தம் நலத்தை அதன் நிழலில் காத்துக்கொள்வதும், கட்டாயமானால் தம் நலத்தை மறுத்துக் கொள்வதும், கடமைகள் நிகழ்வதற்கு முதன்மை என்று தெரிகின்றது. "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்னும் பொன்மொழி இங்கே கருதத் தகும். இவ்வாறு, அறஞ் செய விரும்புதலே வாழ்க்கைப் பாதை!

உணர்வு மிக்கவர்களுக்காவது, இது நினைவிருந்தால், தம் அழகிய நாவலந்தீவின் வெட்டவெளிகளும், ஒதுக்குப் புறங்களும் பொன்னுடென மாறி, கல்வி, செல்வம், வாணிபம், தொழில், கலை, அருள் நுணுக்கங்கள் பெற்று வாழ்க்கைப் பூங்காவெனத் திகழும். கடமையுணர்வு நடுநிலை யுணர்வு; அறவுணர்வு; அது, தெய்வ அருளுணர்வு!

வழியனுப்பு அளவளாவல்

(13-3-'51 திங்கட் கிழமை)

பள்ளி வருகை அலுவலராய் மதுராந்தகம் வட்டத்தில் விளங்கியிருந்த திரு. S. R. தியோடர் அவர்கள் அலுவல் உயர்வுடன் பொன்னேரிக்கு மாற்றப் பெற்றனர். குருகுலப் பாடசாலை ஆசிரியர், அவர்க்கு வழியனுப்பு அளவளாவல் நிகழ்த்தக் கருதினர். குருகுலக் கலையரங்கின் சார்பில் மாசித் திங்கள் நிகழ்ச்சியுடன் அளவளாவற் கூட்டமும் ஆசிரியர்கள் உதவியுடன் 12—3—51 திங்கள் பிற்பகல் இனிது நிகழ்ந்தது.

திரு. தியோடர் அவர்கள் அஞ்ஞான்று, குருகுலத்தின் விளையாட்டு வெளியைத் தொடக்கிவைத்தனர்.

நிழற்படம் எடுக்கப்பெற்றபின், மதுராந்தகம் அஞ்சல் நிலையத் தலைவர் திரு. J. E. ஜீவராஜ் அவர்கள் தலைமையில் கூட்டம் தொடங்கியது. அரிய தலைமையுரைக்குப் பின் குருகுலத்தார் அச்சிட்டு வழங்கிய அன்பியல் நன்மொழி, பாடசாலை ஆசிரியர், திரு. ரகுநாதன் அவர்களால் 'ராகமாலிகை'யாய் இசையுடன் படித்து அளிக்கப்பெற்றது. துணைப் பள்ளிக் கண்காணிப்பாளர் திரு. L. அனஸ்தஸ் அவர்களும், உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர் திரு. குருசாமி அவர்களும் பாராட்டிப் பேசினர். பள்ளிக் கண்காணிப்பாளர் திரு வேதகிரி அய்யர் B. A., B. T. அவர்களும் அன்புடன் வருகைபுரிந்து நன்மொழி கூறினர்.

திரு. தியோடரவர்களின் சுறுசுறுப்பு, இனிய பண்பு, கலந்து அளவளாவும் பழக்கம், பெருமிதம், வீரம், நாட்டு அன்பு, உரிமை யுணர்ச்சி, எளிய வாழ்க்கை, திருந்திய செய்கை, தொண்டில் ஆர்வம், குருகுல நினைவு முதலிய இயல்புகள் புகழப் பெற்றன.

கூட்டத்துக்கு அலுவலர், கிராமத்தார், அயலிடங்களின் பள்ளி ஆசிரியர் மாணவர் பலரும் வந்திருந்தனர். மதுராந்தகம் இந்து உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. ராஜாராம் அய்யர் B. A., L. T. அவர்கள் அன்புடன் அனுப்பிய வாழ்த்துமொழி படிக்கப் பெற்றது.

இறுதியில், கடலூர் 'சங்கீத பூஷணம்' திரு. நடராஜன் அவர்களால், குழல் முழவு முதலிய பக்க வாத்தியங்களுடன் இசை யரங்கு நிகழ்ந்தது. ஆசிரியர் அன்புரையுடன் விழா நிறைவெய்தியது.

குருகுலத்தில்

தண்ணீர்ப் பந்தர்

குருகுலம், மதுராந்தகத்தை அடுத்த மாமபாக்கப் புன்செய் வெளியில் அமைந்துள்ளது. அதனைச் சூழ 2 கல் தொலைவுக்கு ஊர்கள் இல்லை. (வடலூரைப் போன்ற இடம்.)

மதுராந்தகத்திலிருந்து தெற்கே சூணாம்பேட்டுக்குச் செல்லும் பாதை ஓரத்தில் குருகுல நிலையம் திகழ்கின்றது. நாலா பக்கங்களிலுமிருந்து பாதை வழியே செல்லும் மக்கள் நிழலும் நீருமின்றிப் பெரிதும் திகைக்கின்றனர். (குருகுலப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும்,

குருகுலத்துக்கு வருவார் போவார்க்கும் இந்த இடர் உள்ளது.

பல ஆண்டுகளாகத் தொடர்பாய் மழை குறைவு; வெயில் மிகுதி. வேனில் தொடங்குமுன்பே கானல் பெருகி வருகின்றது. பல கிணறுகளில் நீர் வற்றி விட்டது. குளங்கள் உலர்ந்து விட்டன. பாதையிற் செல்லும் மக்கள் பல கல் தொலைவுவரையில் நீர்நிலை காணமல் அல்லலுற்று ஆற்ருது வாடுகின்றனர்; வதைகின்றனர். வரப்போகுங் கோடை வெயிலுக்கு மக்கள் எங்ஙனம் ஆற்றுவர் என்று நினைப்பவர் யாவர்க்கும், நெஞ்சம் துணுக்குறும்.

குருகுல நிலையம் பாதையருகில் இருத்தலால், இதற்கு ஏதேனும் வழி செய்தல் நலமென்று கருதுகின்றது. பண்டைக் காலத்தில் ஆதுலர்க்குச் சோலைகளும் நீர் நிலைகளும் அமைத்தல் போன்ற பல்வேறு அறங்களை நன்மக்கள் செய்துவந்தனர்; இக்காலத்திலும் அவை கட்டாயமே என்பது இவ்வாற்ருல் தெரிகின்றது. நாட்டின் பல்வேறு வெளியிடங்களிலும் ஒதுக்குப் புறங்களிலும் அல்லலுறும் மக்களுக்கு எவ்வுதவியேனும் செய்தளிப்பது நன்மக்களின் இன்றியமையாக் கடமையாகவும் இருக்கின்றது.

இவ்வாறு எண்ணியிருந்தபோது, குருகுலத்தின்பால் அன்பு பூண்டு வரும் தாய்மார் சிலர், ஒருநாள், தயிர் எலுமிச்சம்பழம் போல்வன கொண்டு வந்து தந்து ஊக்கங் காட்டினர். திருவருட்செயல் என்று நினைந்து, உள்கி, இயன்றமட்டுமேனும் ஆவன செய்யக் கருதி, 12—3—51 திங்கட்கிழமையன்று குருகுலத்தில் தண்ணீர்ப் பந்தல் அமைக்கப் பெற்றது. கிழமைக் கொருமுறை நீர்மோரும், ஏனை நாட்களில் தீஞ்சுவைத் தெண்ணீரும் வழிப்போக்கர்க்கு இப்போது அளிக்கப்பெற்று வருகின்றன. நாடோறும் இரண்டும் அளிக்கப்பெறும் நிலைக்கும், மேற்பட்ட அறங்கட்கும் இது பெருகினல், மக்கள் பலர் நெஞ்சம் தணிவும் கிளர்ச்சியும் பெறுவர்; இந்த ஆருயிர்த் தொண்டு ஆண்டவன் தொண்டு என்பது ஆசிரியர் கருத்து.

நல்ல வாய்ப்பு! எளிய ஏற்பாடு!

முருகவேள் பன்னிரு திருமுறைகள்

பதிப்பாசிரியர்: ராவ்பகதூர் தணிகைமணி
திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A. அவர்கள்.

இப் பதிப்பின் சிறப்புகள்

1. தமிழ் நாட்டில், கடந்த பல்லாயிரம் ஆண்டுகளாக எழுந்த தெய்வப் பாடல்களின் தொகுதிகள் இவை. இத் திருமுறைப் பாகுபாடுகள் புதியவை.
2. கந்தவேள் அருள் நூல்கள் தனித்த தமிழ்ச் செவ்வியும் அருட் சிறப்பும் அமைந்தவை. இலக்கிய அழகு, காப்பியப் பண்பு, செய்யுட் சுவை, நாகரிகச் சிறப்பு, பலகலை நலங்கள், வாக்கு வன்மை நிரம்பியவை.
3. ஏறக்குறைய 3000 செய்யுட்கள் கொண்ட பன்னிரண்டாந் திருமுறை (கந்தவேள் அடியார் வரலாறுகள்) இதுகாறும் வெளிவராத புதிய அரிய செய்யுட் காப்பியம்.
4. பெயரமைப்புகள், அடிக்குறிப்புகள், ஆராய்ச்சி இணைப்புகள் முதலிய உழைப்பு மிக்க பதிப்பு நலங்களுடன் குருகுல ஆசிரியர் இளவழகனர் பார்வையில் வெளிவருகின்றன.
5. எல்லாம் அளவு ஒத்த 36 பகுதிகளாக வெளிவரும். அவற்றை 12 தொகுதிகளாகக் கட்டுச்செய்து கொள்ளலாம். கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாயிருந்து தமிழர் இல்லம் ஒவ்வொன்றையும் அருள் மணம் பரப்பி அழகு செய்யக் கூடியவை.

வெளியீட்டுக் குறிப்புகள்

1. 10-4-'51 க்குள் மாம்பாக்கம் குருகுலத்தில் (மதுராந்தகம் அஞ்சல்) ரூ. 1 செலுத்தித் தம் பெயரைப் பதிவு செய்து கொள்வோர்க்குப் பகுதி ஒன்று ரூ. 1¼ விலைக்குக் கிடைக்கும்; அஞ்சல் செலவு வேறு.
2. திருப்பப் பதிப்பிடுவது எளிதன்று; கடித விலையும் காலநிலையும் கடுமையாயிருத்தலால், அளவாகவே நூல்கள் அச்சிடப்பெறும்.

அன்பர்கள் முந்திக்கொள்வது நல்லது; தமக்குத் தெரிந்தவர்களை இதில் ஈடுபடுத்துதல் உதவியாகும்.

குருகுலத்தார்.

குறிப்பு:—கடிதம் எழுதல், தொகை அனுப்பல், நூல்கள் பெறுதல் முதலிய இதன் தொடர்பான எல்லாவகையான செய்கைகளும், 'குருகுலம், மாம்பாக்கம், மதுராந்தகம் அஞ்சல்' என்னும் முகவரிக்கே செய்துகொள்ளவேண்டும்.

“இன்னும் சிலர் புகைப் பொருள்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இவைகளையும் நிறுத்தவேண்டுமென மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் மொழியை ஆட்சி மொழியாய்க் கொண்டு வந்ததை மக்கள் போற்றியிருக்கிறார்கள். கல்வியமைச்சர் தமிழ் மொழியை மேலும் வளர்க்கப் பல திட்டங்கள் கொண்டுவந்திருக்கிறார். அவைகள் எல்லாம் உருவாகும்போது நம் மொழி நன்றாய் வளர்ச்சியடையும். * *”

‘சரி, போவோம் வா’ என்றாள். ‘முழுவதும் கேட்டுவிட்டுப் போவோமே’ என்றேன். ‘பிலவத் தமிழகத்துக்குப் போகவேண்டும் நேரமாகிறது’ என்று தேருக்த அழைத்துச் சென்றாள்.

தேர் மறுபடியும் பறந்து சென்றது. ‘இறங்கு’ என்றாள். ‘அதற்குள் வாகவா’ என்றேன். ‘நம் தேர் மனத் துரிதத்திலல்லவா பறந்து வந்தது. இதுதான் பிலவத் தமிழகம்; வா, நகரத்தைச் சுற்றிப் பார்ப்போம்’ என்றாள்.

உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றாள். அங்கு உணவுப் பண்டங்களின் விலைப்பட்டி எழுதிய பலகை தொங்கிக்கொண்டிருந்தது. அதில் காப்பி டீ முதலியவைகள் காணப்படவில்லை. முன்னைவிட விலைகள் இன்னும் குறைந்திருக்கக் கண்டேன். பாதம் அமுதும் ஆரஞ்சுத் தேநீரும் கொண்டுவந்து வைத்தான். அருந்திவிட்டு வெளியே வந்தோம். ‘எவ்வளவு கொடுத்தீர்கள்?’ என்று கேட்டேன். ‘இருவருக்கும் நாலணா’ என்றான். வியப்பாயிருந்தது. ‘இத் தெருவின் பெயர் என்ன?’ என்று கேட்டேன். திருவள்ளுவர் ஆவணத் தெரு’ என்றாள். ‘வளமான தாய் தமிழ்’ என்றேன். மக்கள் இருமருங்குமுள்ள மேடைகளில் போய்க்கொண்டிருந்தனர். ஆனால் முன்போலல்லாமல் போவோர் ஒரு பக்கமும் வருவோர் ஒரு பக்கமுமாகப் போய்க்கொண்டிருந்தனர். மக்கள் புகைக் குடி எதுவும் பயன்படுத்த வில்லை.

சிந்தனைத் தேர்

(முன் தொடர்ச்சி)

முத்துசாமி

போகுமிடங்களில் கண்டபடி துப்பவில்லை. துப்பவென்று வைத்திருக்கும் சிறு பெட்டிகளிலேயே துப்பினர். தெரு தூய்மையாயிருந்தது. ஊர்திகளில் மக்கள் தாராளமாய் அமர்ந்திருந்தனர். தூய தமிழ் பேசிக்கொண்டு சென்றனர்.

கூல வாணிக வீதிக்குச் சென்றோம். அங்காடிகளில் அரிசி, கேழ்வரகு, சோளம் முதலிய உணவுத் தானியங்கள் நிறைய மூட்டைகளில் அடுக்கி யிருந்தார்கள். பங்கீட்டு முறை இல்லை. எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். ஓர் அங்காடியில் சென்று ‘அரிசி என்ன விலை’ என்று கேட்டேன். ‘படி நான்கணா’ என்றார் அங்காடிக்காரர். வியப்பாயிருந்தது.

ஆட்சி மன்றத்துக்குச் சென்றோம். ஆட்சித் தலைவர் அழகான தமிழில் பேசிக்கொண்டிருந்தார்.

“நிதி நிலைமை முற்றிலும் மன நிறைவு தருகிறது. வைப்பு நிதி இரண்டு கோடியாயிருக்கிறது. இவ்வாண்டில் 10 நூறாயிரம் சேர்க்க எண்ணியிருக்கிறோம். உணவுப் பங்கீட்டை எடுத்துவிட்டோம். நல்ல விளைவு தொடர்ந்து கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம். உணவு வைப்பை நான்கு நூறாயிரம் வண்டியாக உயர்த்தப் போகிறோம். நீர்ப்பாசனத் திட்டங்களெல்லாம் முடிவடைந்து விட்டன.

வரும் ஆண்டில் நில வரியில் ஒரு வெள்ளிக்கு எட்டணாக் குறைக்கப் போகிறோம்: அப்படிக் குறைந்த பிறகும் 7 நூறாயிரம் வெள்ளி மிச்சமாகிறது. இதில் 4 நூறாயிரம் வெள்ளி செலவு செய்து தமிழ்ப் புலவர்களின் குழு ஒன்று அமைத்துத் தமிழ் வளர்க்கத் திட்டமிட்டிருக்கிறோம். உணவு நம் தேவைக்குப் போக 7 நூறாயிரம் வண்டி மிச்சமாக இருக்கும். இதில் நான்கு நூறாயிரம் சேம வைப்பில் வைத்துவிட்டு எஞ்சிய 3 நூறாயிரம் வண்டியை மத்திய ஆட்சிக்கு அனுப்பி, உலகத்தில் எங்கேனும் தேவைக்கு அனுப்பிவைக்கக் கேட்கப் போகிறோம். நமது நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமே நல்ல விளைவாதலால் எங்குமே பற்றாக்குறையில்லை. (அவையினர் கைகொட்டி ஆரவாரிக்கின்றனர்).

ஐ. நா. வில் அணுவன்மையை ஆக்க வழிகளுக்கன்றி அழிவுக்குப் பயன்படுத்துவதில்லையென்று எல்லா நாட்டின் சார்பாளரும் உறுதி கொடுத்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அங்கு ஒற்றுமை நிலவுகிறது. (அவையோர் ஆரவாரம்-போர் ஒழிக! அமைதி நிலவுக!

இன்னொரு முதன்மையான செய்தியை உங்களுக்குக் கூறப்போகிறேன். ஊனுணவு நீக்கத்தின் இன்றியமையாமைபற்றி மக்களுக்கு ஆங்காங்கும் அறிவுரைகள் நிகழ்த்தச் செய்து, மக்கள் கருத்தையும் ஆதரவையும்

கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி!

—N. K. M.—

தங்க நாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில்
வேட்டி, சேலை, துண்டு, போர்வை,
மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம்:

கருப்பண முதலியார்
ஸ்டோர்ஸ்,
துணி வாணிபம்,
53, கிடங்குத் தெரு, சென்னை 1.

தெரிந்து அதன் பின்னர்ச் சட்டம் கொண்டுவர எண்ணியிருக்கிறோம். (மறுபடியும் அவையோர் ஆரவாரம்- ஊனுணவு ஒழிக! சிற்றுயிர்க் கொலை ஒழிக! தூய உணவு பெருகுக!)

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர், சேனையில் வரவாத் தமிழ் நாட்டினர் மிகுதியாகச் சேர்வது குறித்து மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார் * *"

'போவோம் வா', என்றாள். 'முழுமையும் கேட்டுவிட்டுப் போவோமே' என்றேன். 'நேரமாகிறது. பின்னர், நிலையாகவே இங்கு வந்து தங்கிவிடலாம்' என்று சொல்லி ஊர்திக்கு அழைத்துச் சென்றாள். தேர் பறந்து சென்றது.

'துன்முகித் தமிழகமும் பிலவத் தமிழகமும் எப்படியிருந்தன?' என்று கேட்டாள். 'துன்முகித் தமிழகத்தில் சிறிது முன்னேற்றமும் பிலவத் தமிழகத்தில் பெரு முன்னேற்றமும் கண்டேன். தமிழ்ப் புலவர் குழு நம் பண்டைய தமிழ்ச் சங்கத்தைப் போன்றிருக்குமா?' என்று கேட்டேன். 'இருக்கும்' என்று தலையசைத்துவிட்டு 'இறங்கு, விகிருதித் தமிழகம் வந்துவிட்டது' என்றாள். நான் இறங்கினேன்; அவள் இறங்கவில்லை. 'அம்மா, நீங்கள் யார் என்று பின்பு சொல்கிறேன் என்றீர்களே' என்று கேட்டேன். 'தமிழ்த் தாய்' என்ற ஒலி செவியில் நிறைந்தது. திடுக்கிட்டு எழுந்தேன். படுக்கையில் அமர்ந்திருந்தலை அறிந்தேன்.

கனவு பலிக்குமா? மல்லிகா.

ஆண்டவன் திருவருள் புரிவார்; தன்னம்பிக்கை கொள்வோம்.

நேரமாகிறதே; வா, போகலாம். உன் தந்தை தேடுவார்.

[இருவரும் குளத்தை நோக்கி நடந்து சென்றனர்.]

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

அழகியல் நிறைந்தது தமிழ்; தமிழ் மொழி வழங்கும் எல்லையுள் சோழ நாடு உள்ளது. சோழ மன்னர் புலிக் கொடி உடையவர். காடு கெடுத்து நாடாக்குந் தாளாண்மையுடையவராதலின், சோழர்க்குப் புலி பொறித்த கொடி அடையாளக் கொடியாயிற்று. சோழ மன்னர், தமது செல்வாக்கை வடக்கே பனிமலை வரையிற் பரப்பினர். பனிமலையின் உச்சியில் தமது புலிக் கொடியைத் தம் வெற்றிக்கு அறிகுறியாக எழுதினர். அவர் பெற்ற அவ்வளவு சிறப்புக்குங் காரணம், அவர் நாடு காவிரி நாடு என்பதனாலே தான்.

அகத்திய முனிவர் என்னும் சான்றோர், நெடு நாளைக்குமுன் மேற்குத் தொடர்மலைச் சாரலில், ஒரு கால், தவம் பூண்டு விளங்கினர். ஒப்புரவுப் பண்பு மிக்க காக்கையொன்று, அகத்தியர் அருகில் இருந்த கமண்டலத்தின்மேல் அமர்ந்திருந்து, பின் பறந்தெழுந்தபோது, கமண்டலம் சாய்ந்து நீர் ஊற்றிக்கொண்டது. உணர்ந்த முனிவர், ஊற்றிக்கொண்ட நீர் வீண் படாமல் மேன்மேலும் பேரூற்றாய்ப் பெருகி நாடு வளம் சுரப்பதாக என உள்கி வாழ்த்தினர்; தம் கமண்டல நீரைப் பின்னும் தெளித்து அகத்தியர் வாழ்த்திய வாழ்த்து, எந்நாளும் நாட்டுக்கு வாழ்வளித்து வருகின்றது. வீணாவது போல் தோன்றுவதைச் சான்றோர் தமக்கும் நாட்டுக்கும் நன்முகமாக்கிக் கொள்வர். காவிரியாறு வரவரப் பெருகி, நிலமடந்தையின் மார்பில் அமைந்த முத்து மாலைபோல் ஒழுகி நாட்டை அழகு செய்து வருகின்றது.

கந்தர் கழலெழுபது

[திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A.]

37. என்னூரும் என்தாயும் என்னுறவும்[1] என்குருவும்
என்னுயிரும் என்நினைவும் எல்லாமும் — என்னைத்
தருணத்தி லேவந்து தாங்குவதும் தானும்
கருணைநிறை கந்தர் கழல்.

கழலின் அருள்

38. வாழ்வாக்கும் மோன வழிதிறந்து காட்டிவிடும்
தாழ்வான எல்லாம் தவிர்த்துதவும் — பாழ்வாழ்வில்
வீழாமற் காக்கும் வெறுவெளியி லேயாடும்
காழாருங் கந்தர் கழல்.

39. எங்கே நினைப்பினும் இங்கே எனத்தோன்றி[2]
நங்கேதம் எல்லாம் நலிவித்தே — அங்கே
நனியாக்கந் தந்துதவி நந்நெஞ்சக் கல்லைக்
கனியாக்குங் கந்தர் கழல்.

40. மனைமகவாத் தோன்றி வருமலைகள் கொண்ட
கனைகடலைச் சென்மங் கடக்க — வனைபுணையாய்[3]
நின்றுதவி செய்யும்; நிமலர் இடத்தேமான்
கன்றர்தரு கந்தர் கழல்.

41. உருகா மனங்குழையா உள்குவா ருள்ளத்
தொருகால் முருகாஎன் றோத[4] — இருகாலும்
தோன்ற அருளுவது; தூயராய்த் தீயவெலாங்
கான்றவர்சொல் கந்தர் கழல்.

---

1. "ஊர், பெற்ற தாய், சுற்றமாயுற்றதாள்"—திருப்புகழ் 1036.
2. கந்தரலங்காரம்—104. 3. சீர்பாத வகுப்பு. 4. நக்கீரர்-தனிப்பாடல்.

"முல்லைக் கொடி"

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில், புரியும் வகையில்,
உரிய விலையில்,
பலதுறைக் கருத்தில்,
சீர்திருத்த முறையில்,
சுவைப் பண்பில், பணி உருவில்
வெள்ளிக் கிழமைதோறும்
வெளிவரும்
ஒரு பெருந்தன்மையான
உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4
வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு:—

குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ 3 மட்டும்.

இதழ் விற்பனையாளர்

எல்லா ஊர்களிலும் தேவை;
ஆறில் ஒன்று கழிவு தரப்பெறும்.
இசைந்த முன்பணத்துடன்
தேவைக்கு எழுதுக!

விளம்பரத் திட்டம்

உள் பக்கம்:

ஒரு பத்தியில் ஓர் அங்குலம் ஒரு தடவைக்கு ரூ. 1½. நீண்ட கால ஒப்பந்தங்களுக்கு ரூ. 1.

கு-பு.—நான்கு அங்குலத்துக்குக் குறையாத விளம்பரமும், ஓர் ஆண்டுக்குக் குறையாத ஒப்பந்தமும் முதன்மையாகக் கவனிக்கப்பெறும்.

மேல் பக்கம்:

முழுப் பக்கம்	ஒரு தடவைக்கு	ரூ. 30
அரைப் பக்கம்	,, ,,	ரூ. 16
ஒரு பத்தி	,, ,,	ரூ. 12

கு-பு.—தொடர்ந்த விளம்பரங்களுக்கு, கட்டண எளிமை கருதப்பெறும்.

குருகுலம், மாம்பாக்கம்;

(வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி)

மதுராந்தகம் (அஞ்.)

இது,

திருக்குறள் மறைக்குச்

செய்கை நிலையம்.

நாட்டு மக்கள், 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்' 'பணி' என்னும் ஐவகை வாழ்வியல் திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலையர், உணவு விடுதி முதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

வாழி, மன்பதை!

குருகுலத்தில் **உணவு விடுதி**

- பிள்ளைகள், பண்பிலும் திறமையிலும் இளம்பருவத்திலிருந்தே பழக்கம் பெற, குருகுல வாழ்க்கைதான் சிறந்தது!
- சுவைபொருந்திய நல்வாழ்க்கையைச் சிறு பருவத்திலேயே உருவாக்கிக்கொள்ள, எப்போதும் குருகுலச் சூழலே ஏற்றது.
- மதுராந்தகம் உயர்நிலைப்பள்ளி முதலிய அண்மையிடங்களிற் சென்று கல்வி பயில்வோர், குருகுல விடுதியில் இருக்க விரும்பினால், அவர்க்கும் இடம் அளிக்கப்பெறும்.
- உணவுத் தட்டும் விலையுயர்வும் உள்ள இக் காலத்தில் ஆண்டுக்கு ரூ. 200-க்கு மேற்படாத குறைந்த செலவிலும், விடுதியிற் கலந்து கொள்ள வாய்ப்புண்டு.
- தூய்மையிலும், பணியிலும், ஒருமையிலும் ஆர்வமுடையோர்க்குக் குருகுல இல்லத்தின் வாயில் என்றுந் திறந்திருக்கின்றது!

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. க. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)